## தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகார சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை அதிகார சபையால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | உரிய தரத்தின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிளிநொச்சி ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு உரியதாக 2018 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் அரச மூலதன மானியங்கள் மற்றும் பிற்போடப்பட்ட வருமானத்தினை கணக்கு வைக்கும் போது ஏற்பட்டிருந்த ரூபா 16,297,465 ஆன வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் 47 ஆம் பந்திக்கமைய முன்னோக்கி சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டினுள் சொத்துக்களை சாட்டும் இலாபமொன்றாக நிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட காரணத்தால் அந்த அளவினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறைகள் மற்றும் திரண்ட நிதியம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கிளிநொச்சி ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தை ஜேர்மன் பயிற்றுவிப்பு அதிகாரசபைக்கு சுவீகரிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றும் போது சொத்து அகற்றல் இலாபமாக ரூபா 16,297,465 ஆன இலாபம் உருவாகியதுடன், அவ்வாறு இலாபம் ஏற்பட்டமைக்கான காரணங்களை ஆராயும் போது வெளிப்படுத்தப்பட்டது 2018 ஆம் ஆண்டு முதல் மூலதன மானியங்களை கணக்கு வைத்தல் மற்றும் பிற்போடப்பட்ட வருமானங்கள் (Differed Income) கணிப்பீடு செய்தல் தவறான விதத்தில் இடம்பெற்றுள்ளமை ஆகும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உள்ளடக்கப்பட்ட தவறுகள் முன்னோக்கி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு கிடைத்திருந்த ரூபா 67,705,041 தொகையான மூலதன மானியங்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் கணக்குகளை தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து, உரிய அறிவினை வழங்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது கொண்டுசெல்லும் பெறுமதி | 2022 ஆம் ஆண்டின் போது இந்த வழு பேரேட்டுப் பதிவுகளிள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் அனைத்து |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 110,974,250 ஆன சொத்துக்கள் மீள்மதிப்பீட்டிலிருந்து விடுபட்ட காரணத்தால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் மீள்மதிப்பீட்டு பெறுமதி அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படும் என்பது. | சொத்துக்களும் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் கீழ் காணப்படும் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ஆஸ்திரிய செயற்திட்ட நிதியத்திலிருந்து கடந்த வருடத்தில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,584,556,810 கூட்டுத்தொகையான கட்டிடங்கள், பயிற்சி உபகரணங்கள், கட்புலச் சொத்துக்கள் மற்றும் நவீனமயப்படுத்தல் மற்றும் கல்விசார் பதவியணியின் பயிற்சிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 168,937,662 தொகையை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது இந்த பெறுமதியை கணக்குகளின் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கும் இனைத்து நிதியங்கள் மற்றும் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | “Multi purpose Development Task Force Training Programme 100,000” செயற்திட்டத்திற்காக சனாதிபதி செயலகத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 18,770,586 தொகையை வைப்புக் கணக்கொன்றில் தக்கவைப்பதற்க பதிலாக ஆண்டிற்கான இலாபமாக இனங்காணப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு (Multi-Purpose Development Task Force Training Programme) உரிய மதிப்பிடப்பட்ட கிரயத்தினை விட உள்ளபடியான செலவினம் குறைவடைந்த சந்தர்ப்பமொன்றில், இந்த மிகையை மீள செலுத்துவதாக அதிகாரசபை மற்றும் செயலணி ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையீல் (MOU) குறிப்பிடப்படவில்லை. அந்த மீதியை பயன்படுத்தி செயற்திட்டத்திற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (ஈ) | அதிகாசபைக்கு தனியார் நிறுவனமெமான்றிலிருந்து வெகுமதியாக கிடைத்த ரூபா | கொரோனா தொற்றுநோய் நிலைமைக்கு தேவையான ஆயிரம் கட்டில்களை | அதிகாரசபைக்கு கிடைக்க அனைத்து வருமானங்களும் |

| | | | |
|---|---|---|---|
| | 1,000,000 ஆன தொகை அதிகாரசபையின் வருமானமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக ஊழியர் சேம நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | தயாரிப்பதற்கு தேவையான ரூபா 1,000,000.00 ஆன தொகை அதிகாரசபையின் தலைவரின் எழுத்துமூல கோரிக்கைக்கமைய தனியார் நிறுவனமொன்றினால் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த பணியை நிறைவேற்றுவதற்காக நலன்புரி நிதியத்திற்கு தலைவரால் பொறுப்பு சாட்டப்பட்டிருந்த போதிலும், அந்த காசோலை அதிகாரசபையின் பெயருக்கு வரையப்பட்டிருந்த காரணத்தால், அதிகாரசபையின் கணக்கில் வைப்புச் செய்து, காசோலை தீர்வையாகிய பின்னர் அந்த பணத்தை மீள நலன்புரிய கணக்கிற்க மாற்றி பணியை நிறைவேற்றுமாறு தலைவர் குறித்த உறுதிச்சீட்டில் எழுத்துமூலம் பதிவு செய்து அறிவுரை வழங்கியுள்ளமை. | அதிகாரசபையின் வருமானங்களாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிடின் போது இரு நிறுவனங்களிடமிருந்து வெகுமதியாக கிடைத்திருந்த 500 Tab இயந்திரங்களின் பெறுமதிகள் மற்றும் பேரூந்தின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட்டிராத காரணத்தால் கணினி மற்றும் மோட்டார் வாகனங்களின் மற்றும் வெகுமதிகள் கணக்கின் மீதி ஆகியன நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | 500 Tab இயந்திரங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் போது உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வெகுமதியாக கிடைத்திருந்த அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அதிகரசபையீன் கற்றல் வளங்கள் நிலையத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 3,351,456 பெறுமதியான 16,235 பாடநெறிப்புத்தக இருப்பின் கீழ் கணக்கு வைத்தல் கைவிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது புத்தகங்களில் சீராக்கம் செய்யபடும் என்பதை மேலதிகமாக அறிவிக்கப்படும் என்பது. | இறுதி இருப்பனை சரியாக இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டியமை. |
| (எ) | மீளாய்வாண்டுக்கு உரியதாக ரூபா 1,490,345 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.12.31 ஆந் திகதியளவில் உரிய செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகையான ரூபா 1,490,345 ஆன தொகை பேரேட்டில் உள்ளடக்கி கணக்கு வைக்கப்பட்டு அந்த தவறும் திருத்தப்பட்டுள்ளமை. | ஆண்டுக்குரிய பணிக்கொடை தொகையை சரியாக கணக்கு வைக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 100,724,147 கூட்டுத்தொகையான பெற வேண்டிய மீதியினுள் 01 முதல் 16 வருடங்களுக்கு உட்பட்ட அறவிடப்படாத ரூபா 36,312,338 கூட்டுத்தொகையான நானாவித கடன் பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 1,116,983 கூட்டுத்தொகையான ஊழியர் கடனும் உள்ளடங்கியிருந்ததுடன், இந்த மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காது தொடர்ச்சியாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | பணத்தை அறவீடு செய்வதற்கு இயலுமை காணப்படாமைக்கு காரணம் அந்த ஊழியர்கள் தற்போது அதிகாரசபையில் சேவையாற்றாமையே ஆகும். அதற்குரிய நிதியேற்பாடுகள் கணக்கு புத்தகங்களில் சீராக்கப்பட்டுள்ளமை. | நீண்ட காலமாக பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 அம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 198,247,374 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதியினுள் 02 வருடம் முதல் 14 வருடங்களுக்கு இடைப்பட்ட செலுத்த வேண்டிய முற்பணங்கள், வைப்புக்கள் மற்றும் நானாவித கடன் பட்டோர் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா 83,517,427 ஆக காணப்ப்பட்டதுடன், அதனை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த மீதிகள் தொடர்பில் பரிசோதனை செய்து பார்த்து துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நீண்ட காலமாக நிலவும் செலுத்த வேண்டிய பணத்தை தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 65(1) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டவட்டமான பணிகள் மற்றும் நிதியானது உரிய அதிகாரமின்றி மாற்றம் செய்யப்படக்கூடாத போதிலும், மூலதன செலவினங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 8,990,978 தொகை எதுவித அங்கீகாரமும் இல்லாது மீண்டெழும் தன்மையுடைய செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த ரூபா 8,990,978.00 ஆன தொகை அதிகாரசபையின் மூலதனச் செலவினங்களின் ஒரு பகுதியான Rehabilitation இற்காக ஈடுபடுத்தப்பட்ட செலவினமாகும். அது Major Repair ஆக தனியாக கணக்குகளில் இனங்காணப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டின் கணக்கு கூற்றுகளில் பராமரிப்பு செலவினமாக கருதி இலாப நட்டக் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது. | மூலதனச் செலவினங்களுக்காக கிடைக்கும் நிதி மீண்டெழும் செலவினங்களுக்கு செலவிடப்படக் கூடாது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| | II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | பதிற்கடமை நியமனம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டியது நிரந்தர நியமனம் ஒன்றினை மேற்கொள்ளும் வரையில் தற்காலிகமான மாற்று வழிமுறை ஒன்றாக மாத்திரமே என்பதுடன் பதவிக்கு முழுமையான அடிப்படையில் உத்தியோகத்தர் | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிலவும் அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச வரவுசெலவுத்திட்ட | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோவைக்கமைய நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒருவரின் சேவை தேவைப்படும் எனின் நிரந்தர நியமனம் ஒன்றினை தாமதிக்காது மேற்கொள்ள வேண்டிய போதிலும் நிறுவனத்தின் 09 உத்தியோகத்தர்களுக்கு 08 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான கால வீச்சில் பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு வரிசை அமைச்சின் மூலம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் குறித்த அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லை. பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் பதவியொன்றில் பதிற்கடமை அடிப்படையில் சேவையாற்றிய உத்தியோகத்தர் குறித்த பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சுற்றறிக்கை ஏற்பாடுகள் | | | |
| (i) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தி | ஒவ்வொரு பதவியணி தொகுதிக்காகவும் தனித்துவமான திறன்களை இலக்கிட்டு அவற்றை அடைந்து கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சிக்காலத்தை பூர்த்தி செய்யும் வகையில் மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். அதற்கமைய பயிற்சிக்கொள்கை ஒன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட வகையில் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 10 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பட்டத்தின் பின் படிப்புகள் மற்றும் ஏனைய பாடநெறிகளுக்காக ரூபா.1,338,537 தொகை மீளளிப்பு | மனிதவள அபிவிருத்தி திட்டத்திற்கான தகவல்களை சேகரிப்பதற்கான மாதிரிப்படிவம் ஒன்று தற்போது அனைத்து மாவட்ட அலுவலகங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை. | ஒவ்வொரு பதவியணி தொகுதிக்கும் பொருத்தமான வகையில் பயிற்றுவிப்புக் கொள்கை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டிருந்தது. எனினும் அப்பாடநெறிகளை பூர்த்தி செய்தமைக்கு எதுவித சான்றுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 05 மாத கால தாமதத்தின் பின்னர் அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2022 நவம்பர் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் நிதியாண்டில் நிதிக்கூற்றுக்களை உரிய காலப்பகுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க முடியாமைக்கு நாட்டின் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமை மற்றும் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியன காரணமாக அமைந்திருந்ததுடன் அரச உத்தியோகத்தர்களை சேவைக்கு வரவழைப்பதில் மட்டப்பாடுகள் நிலவியமை மற்றும் மின்சார பிரச்சனை ஆகியவை இதற்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தமை. | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 57,777,077 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்ததாக கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 43,708,460 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 14,068,617 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய பயிற்சி செலவினங்கள் மற்றும் வளாக பராமரிப்பு செலவினங்கள் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தொலைபேசி சேவை கம்பெனி ஒன்றிலிருந்து முறையே 450 மடிக்கணினிகள் மற்றும் 500 கிடைத்திருந்ததுடன் எதுவித அங்கீகாரம் மற்றும் கொள்கையும் இல்லாது அதிகார சபையின் பல்வேறு பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு அந்த Tab இயந்திரங்களுடன் சிம்களும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்த 35 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த Tab இயந்திரங்களையும் மீளப் பெற்றுக் கொள்வதற்கு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபைக்கு கிடைத்திருந்த Tab இயந்திரங்கள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை அதிகார சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டிருந்த எழுத்து மூல அங்கீகாரத்தின் கீழேயே என்பதுடன் அதற்குரிய ஆவணங்கள் களஞ்சியத்தில் காணப்படுகின்றன. எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் அவ்வாறு வழங்கவில்லை எனில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள Tab இயந்திரத்தினை மீளப்பெற்றுக் கொள்வதற்கு தற்போது அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | Tab இயந்திரங்களை பகிர்ந்தளிக்கும் போது கடமை தேவைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ள வேண்டியதுடன் சேவையிலிருந்து விலகிச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள Tab இயந்திரங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையில் அடிப்படை இலக்கினை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய பயலுநர் பயிற்றுவிப்புகள் தொடர்பில் அடைந்து கொள்ள எதிர்பார்த்திருந்த இலக்கு முறையே 37 மற்றும் 12 சதவீதத்தினை மாத்திரம் அடைந்திருந்தமையும் பயிலுநர்கள் விட்டுச் செல்லல் முறையே 5119 மற்றும் 2301 ஆக காணப்பட்டதுடன் வருடாந்த ஆட்சேர்ப்புகளில் 42 சதவீதமான பயிலுநர்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | Covid 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் தொழில்சார் பயிற்சிகளுக்கான வருகை தருதலின் குறைவொன்று காண்பிக்கப்பட்டதுடன் கைத்தொழில்களுக்கான புதிய பதவியணியினை பயிற்றுவிப்பதற்கு பயிலுநர்களை இணைத்துக் கொள்வதிலும் பாரிய வீழ்ச்சி ஒன்று காணப்பட்டமை. | வருடாந்தம் இனங்காணப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலுவை ஊழியர் நலன்புரி நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களுக்கு உரியதாக செலுத்தப்பட்ட ரூபா.82,437,195 கூட்டுத் தொகையான மிகை கட்டணங்கள் மற்றும் ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.58,908,280 தொகை உரிய பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு பதிலாக கடந்த வருடத்தின் செலவினம் ஒன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இந்த அதிகார சபையின் 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினை கணிப்பீடு செய்யும் போது ஊழியர்களின் வாழ்க்கை செலவினப்படிகள் உள்ளடக்கப்பட்டிராத காரணத்தால் நிலுவை ஊழிய பங்களிப்பு தொகையாக ரூபா.58,908,280.00 மிகைக்கட்டணமாக ரூபா.82,437,195.00 தொகை செலுத்தப்பட்டமை தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் தற்போது அதிகாரசபையில் இருந்து ஓய்வு பெற்று சென்றுள்ளமையால் அப்பணத்தை அவர்களிடமிருந்து அறவிடும் இயலுமை காணப்படவில்லை என்பது. | ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கு தாமதமின்றி கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச கொள்ளைக்கமைய 2020 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்த 100,000 தொழில் வல்லுநர்களினை கொண்ட பல்துறைச் செயலணி ஒன்றினை நிறுவும் செயற்திட்டத்திற்காக ஜனாதிபதி செயலகத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா.12,470,721 மற்றும் ரூபா.51,944,364 செலவிடப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா.4,650,800 செலவிடப்பட்டு தகவல்களை சேகரிப்பதற்காக தனியானதொரு கணினி கட்டமைப்பொன்று | ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பு செயற்திட்டத்தின் கீழ் முதலாவது கட்டத்தில் முப்பத்தி நான்காயிரம் பயிலுநர்கள் மாத்திரம் பயிற்சியினை பெற்றிருந்ததுடன் அந்த பயிற்சிகளைப் பெற்ற பயிலுநர்களுக்கு உரிய 32,505 சான்றிதழ் பத்திரங்கள் அதிகாரசபையிடம் காணப்பட்டது. நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமின்மை, நிர்வாகத் துறையில் ஏற்பட்ட சில | பயிலுநர்களுக்கு சான்றிதழ் பத்திரங்களை துரிதமாக வழங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவப்பட்டிருந்தது. 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குறித்த செயற்திட்டத்தினை செயல்படுத்தியிராததுடன் இந்தப்பாட நெறிக்காக பயிற்சி பெற்ற பயிலுநர்களுக்கு 32,505 சான்றிதழ்களை வழங்காது அதிகார சபையில் வைக்கப்பட்டிருந்தது. | மாற்றங்கள் காரணமாக இந்த செயற்திட்டமும் செயற்திட்டத்திற்குரிய சான்றிதழ் பத்திரங்களும் பகிர்ந்தளிப்பதில் காலதாமதமானதுடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு மற்றும் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பு செயலணி இணைந்ததாக இந்த சான்றிதழ் பத்திரங்களை பயிலுநர்களுக்கு கூடிய விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.3 பந்தி மற்றும் 5.3.1(ஈ), 4.1.1(இ) பிரிவுகளுக்கு முரணாகவும் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் நோக்கங்களுக்கு புறம்பாகவும் வெளிப்படை தன்மையற்ற ஒரே உரிமையாளருக்கு சொந்தமான இரு பெயர்களில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் இரு நிறுவனங்களை தெரிவு செய்து 2020 உலக இளைஞர் திறன்கள் தினம் கொண்டாடுவதற்கு உரிய தேசிய நிகழ்ச்சி திட்டத்திற்காக ரூபா.1,032,930 செலவிடப்பட்டிருந்தது. | தொலைபேசி பெயர் பட்டியலில் வழங்குநர் ஒருவரை தெரிவு செய்யும்போது உரிமையாளரினை பரீட்சிக்கும் இயலுமை காணப்படாததுடன் அதனால் இந்த நிறுவனங்களிடையே ஒரே உரிமையாளரின் பெயரில் பதிவு செய்து உள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்த முடியாது இருந்தமை. | பெறுகை நடைமுறையை செயல்படுத்தும் போது பெறுகைகள் வழிகாட்டி கோவைகளின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செய்யப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தற்ற மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணான | அதிகார சபையின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு |

| | | |
|---|---|---|
| வகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையின் கீழ் அதிகாரசபைக்கு பணிப்பாளர் பதவியொன்றுக்குஇணைத்துக் கொள்ளப்பட்டு அதிகார சபையின் நோக்கங்களுக்கு முரணான பணிகளை நிறைவேற்றியவாறு இருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு 2021 ஜூலை முதல் 2022 ஆகஸ்ட் மாதம் வரையிலும் ரூபா.2,106,740 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்கிய பதவியணி ஒன்றல்லாத பணிப்பாளர் பதவிக்காக முன்னாள் தலைவரின் அறிவுரைக்கமைய கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் உத்யோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டுள் ளார். எனினும் 2022 செப்டம்பர் மாதம் முதல் அவரின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளமை. | இணங்க ஆட்சேர்ப்புகள் இடம்பெற வேண்டியமை. |